# செலான் வங்கியின் முழுக்கதை

# செலான் வங்கியின் எதிர்கால பயணத்திற்கு இலங்கை வங்கியின் முழுப்பலமும்



கலாநிதி. காமினி விக்கிரமசிங்க
தலைவர் - இலங்கை வங்கி

**கே: இப்பிரச்சினை பற்றி உங்களின் அபிப்பிராயம் என்ன?**

ப: இப்பிரச்சினைகளுக்கு பின்னனியாக பொதுவான சில விடயங்கள் காரணமாக அமைந்தன. அவை காரணமான செலான் வங்கியில் பாரியளவிலான மீளப்பெறல்கள் நிகழ்ந்தன. சக்வித்தி பினான்ஸ் நிறுவனத்தின் நிதி மோசடி நடைபெற்று சிறிது காலத்திலுள்ளேயே கோல்டன் கீ பற்றி செய்தி பரவியது. இதனாலேயே மக்கள் கலக்கமடைந்தனர். சர்வதேசரீதியில் ஏற்பட்ட நிதி நெருக்கடி காரணமாகவே இந்த நிலைமை ஏற்பட்டது.

செலான் வங்கியை இந்த பிரச்சினையே பாதித்தது. தற்போது அதற்கான விலையை அது செலுத்தியுள்ளது. எவ்வாறாயினும் சரியான தருணத்தில் இலங்கை மத்திய வங்கியின் தலையீடு, பணிப்பாளர் சபையின் மாற்றம் மற்றும் வங்கியினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் காரணமாக நிலைமை கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. தற்போது முன்னைய நிலைமைக்கு நிர்வாகத்தை சீர்படுத்த சிறிது காலம் தேவை.

**கே: இலங்கை வங்கி இத்தருணத்தில் தலையீட்டது எவ்வாறு**

ப: ஒரு வங்கியின் காசுப்பாய்ச்சலில் சிக்கல் ஏற்படும் போது இன்னொரு வங்கியிடமிருந்து சகாய வட்டி வீதத்தில் கடன் பெறுவது ஒரு வழமையான விடயமாகும். எனினும் செலான் வங்கி செலிங்கோ குழுமத்தில் அங்கம் வகிப்பதால் ஏனைய வங்கிகள் உதவி செய்ய தயங்கின.

இந்த தருணத்திலேயே இலங்கை மத்திய வங்கியினால் செலான் வங்கிக்கு உதவுமாறு கடிதம் மூலம் கேட்டுக்கொள்ளப்பட்டமைக்கு அமைய இலங்கை வங்கி இக்கட்டான இந்த தருணத்தில் உதவிக்கரம் நீட்டியது.

**கே: இலங்கை வங்கியின் உதவி எதுவரை இருக்கும்**

ப: உடனடி தேவை நிதிஉதவியாகும். தற்போதைய நிலையில் செலான் வங்கிக்கு பாரியளவான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நாணயங்கள் தேவை. மீண்டும் நம்பிக்கை ஏற்படுத்துவதற்கும், காசுப்பாய்ச்சலை சீராக்கவும் மத்திய வங்கி இலங்கை வங்கியை கேட்டுக் கொண்டுள்ளது. மிகவும் பலமானதும் நீண்ட வரலாற்றையும் கொண்ட செலான் வங்கியை இவ்வாறானதொரு நெருக்கடியில் இருந்து மீட்டு மீண்டும் அதன் சேவையை வெகுகாலத்திற்கு தொடரச் செய்வதே எமது நோக்கமாகும். இந் நெருக்கடியான தருணத்தில் எந்தவிதமான நிதி நன்மைகளையோ அல்லது முறையற்ற விதத்திலான இலாபத்தினையோ பெற நாம் துளியும் எண்ணவில்லை. ஒரு சில வங்கிகள் தமது விளம்பரத்தை அதிகரிக்க இந்தருணத்தை பயன்படுத்த முயன்ற போதிலும் நாம் அவ்வாறு நடந்து கொள்ள மாட்டோம்.

**கே: இவ்வாறான சந்தர்ப்பம் ஒன்றில் நிதிநிறுவனம் ஒன்றுக்கு உதவி செய்த அனுபவம் ஏதும் இலங்கை வங்கிக்கு உண்டா?**

ப: ஆம் நிச்சயமாக. இலங்கை வங்கி பல இக்கட்டான நிலைமையில் இருந்த பல நிதிநிறுவனங்களுக்கு உதவியுள்ளது. அண்மையில் கூட இலங்கை வங்கி இரண்டு பாரிய நிதி நிறுவனங்களுக்கு உதவிக்கரம் நீட்டியுள்ளது. தேசத்தின் முன்னணி வங்கி என்ற வகையில் நாம் இதை செய்து வருகிறோம்.

**கே: இவ்வாறான நிலைமைகளுக்கு இலங்கை வங்கி ஏன் முன்னிற்கிறது.**

ப: நாமே இத்தேசத்தின் மிகப்பெரிய வங்கி. எமது சொத்துக்கள் மற்றும் ஒதுக்கங்களின் படி நாமே மிகவும் நிலையான வங்கி. அரசாங்கத்தின் பக்கபலத்தையும் நாம் கொண்டுள்ளதால் மக்களுக்கு நம்பிக்கை அளிக்கின்றோம்.

**கே: இது இலங்கை வங்கி மீது தேவையற்ற அழுத்தங்களை தருமா?**

ப: ஆம். பொதுமக்களும் ஊழியர்களும் ஏன் வங்கி இத்தருணத்தினை சுமையினை சுமக்க வேண்டும் என கேள்வி எழுப்பினர். எனினும் நான் முன்னர் கூறியபடி தேசத்தின் முன்னணி வங்கியாகிய நாம் எமது தொழிற்துறை பாதுகாக்க கடமைப்பட்டுள்ளோம். மேலும் பொதுமக்களுக்கும் ஊழியர்களுக்கும் இக்கட்டான ஒரு தருணத்தில் தமது வங்கி வழங்கிய உதவிக்கரம் பெருமை சேர்க்கும்.

**கே: செலிங்கோ குழுமத்தின் தளம்பல் செலான் வங்கியை பாதிக்கலாம் அல்லவா?**

ப: நாம் எடுத்துள்ள கடுமையான நடவடிக்கைகள் மூலம் அதை தவிர்க்கலாம். அறவிடமுடியா கடன் இருப்பதை நாம் ஏற்றுகொள்ள வேண்டும். தற்போதைய கொள்கை படி குழுமத்தை சேர்ந்த நிறுவனங்களுக்கு கடன் வழங்கப்பட மாட்டாது. இதனால் வங்கியின் செயற்பாடுகள் வலுப்பெறும்

**கே: எதிர்காலத்தில் செலான் வங்கி பலம் பெற முடியுமா?**

ப: ஆம் நிச்சயமாக. தற்போது வங்கி மிகவும் நிபுணத்துவம் பெற்றவர்களால் வழிநடத்தப்படுகிறது. ஊழியர்கள் அனைவரும் முழு ஈடுபாட்டுடனும் அர்பணிப்புடன் இந்நிலைமை மாற்ற செயற்பட்டு வருகின்றனர். இந்நிலை தொடர்ந்தால் நிச்சயம் முன்னரை விடவும் வலுமிக்க வங்கியாக செலான் திகழும்.

**கே: செலான் வங்கி வாடிக்கையாளர்களுக்கு ஏதும் உபதேசம் உள்ளதா?**

ப: செலான் மிகச் சிறந்ததொரு வங்கி. அதன் கடமையை அது நிச்சயம் செய்யும். அது பற்றிய சந்தேகம் தேவையில்லை. குழுமத்தை சேர்ந்த ஏனைய நிறுவனங்களால் பாதிக்கப்பட்ட போதிலும். தற்போதைய தகவல்களுக்கு அமைய வங்கி மீளும் என்பது மட்டுமல்ல மீண்டும் முன்னரைவிடவும் வலுவாக எழுச்சி பெறும்.



நேர்காணல்:
சாவித்ரி ரொட்ரிகோ

# செலான் வாடிக்கையாளர்களுக்கு எமது மனமார்ந்த நன்றி...

## எம் சேவையுடன் தொடர்ந்து இருந்தமைக்கு மிக்க நன்றி.

எமது சேவையோடு தொடர்ந்து அசைக்க முடியாத நம்பிக்கையுடனும், பலத்துடனும் எம்முடன் இணைந்து எமது வாடிக்கையாளர்கள் வழங்கிய ஒத்துழைப்பே எம் வெற்றிக்குக் காரணமாய் இதுவரை காலமும் விளங்கியதுடன், சவாலை எதிர்கொள்ளவும் உதவியது.

மீண்டும் புதிய அதிகார சபையுடனும் புதிய பலத்துடனும் சவாலைச் சமாளித்து, வெற்றி மிக்க பயணத்தைத் தொடர ஆயத்தமாகியுள்ளது. இத் தருணத்தில் சகல வாடிக்கையாளர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டுள்ளோம்.

எமது பெறுமதிமிக்க வாடிக்கையாளர்கள் எம்மீது கொண்டுள்ள அதீத நம்பிக்கையும், ஆதரவும் தான் எமக்கு புதிய வலுவையும் உத்வேகத்தையும் தந்துள்ளதென்றால் அது மிகையாகாது.

எம்மைப் பிரிந்து சென்ற அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் தொடர்ந்தும் நாம் அன்புடன் அரவணைக்கும் சேவையை வழங்குவோம் என்று உறுதிகூறி அன்புடன் வரவேற்கின்றோம்.

செலான் வங்கி
அன்புடன் அரவணைக்கும் வங்கி